கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி.

*வினா எண். 177—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் இருந்து அபராத வட்டி தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :

(அ) வீடு கட்டுவதற்காக அரசு வழங்கியுள்ள கடன்கள் மீதான அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யுமாறு கோரிக்கைகள் வந்துள்ளன.

(ஆ) 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் வரை ஒவ்வொரு கடனிலும் சேர்ந்திருந்த அபராத வட்டியை தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும், இந்தப் பொருள்பற்றி வந்துள்ள கோரிக்கைகள் அரசின் பரிசிலனையில் உள்ளன.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, வீடு கட்டுகிற சங்கங்களைத் தவிர, மற்ற கூட்டுறவு சங்கங்கள் தாங்கள் வாங்கிய கடனுக்காக வட்டியைக் கட்ட முடியாத நிலையில் இருக்கும்போது அபராத வட்டி போடுவது சரியல்ல, முறையிலே அதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டு கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதைத்தான் நான் கேட்டிருக்கிறேன். ஆனால், அமைச்சர் அவர்கள் வீடு கட்டும் சங்கங்கள் பற்றி பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்கள் வியாபாரத்திற்காக வாங்கிய கடனைப் பற்றித்தான் கேள்வி.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாநில அரசு மத்திய அரசிடம் வாங்கிய கடனுக்கும் மத்திய அரசு உலக வங்கியிலிருந்து வாங்கிய கடனுக்கும் வட்டியைக் கட்ட முடியாத நிலைமை இருக்கும்போது அபராத வட்டி வசூலிப்பது சரிதானா ? உண்டான வட்டியையே கட்ட முடியாத போது அபராத வட்டியைக் கேட்பது சரியாக இருக்காது. ஆகவே, இந்த அபராத வட்டி என்பதை அறவே எந்தக் கடனானாலும் தள்ளுபடி செய்வறங்குவதற்கு அரசு முன் வருமா ?

1979 பிப்ரவரி 24]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, விவரங்கள் தற்போது இல்லை, தனிக் கேள்வி போடவும்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, பல கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து 'இந்த அபராத வட்டியை வசூலிக்கக்' கூடாது என்று சொல்லி கோரிக்கை வந்திருக்கிறது. மாயவரம் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வந் திருக்கிறது. அதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, கோரிக்கை வந்திருந்தால் அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, நேற்றைக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 2 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். வரவேற்கக் கூடிய அம்சம். பரமக்குடியிலே 5 ஆயிரம் கைத்தறி நெசவாளர் குடும்பங்கள், 27 கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு இந்தத் திட்டத்திலே இடம் உண்டா ? வீடு கட்டுவதிலே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் என்னுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டும். மொத்தத்தில் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய கோரிக்கை வந்துள்ளதா என்று கேட்கப்பட்டு இருக்கிறது. தாங்கள் குறிப்பிட்ட இடத்தை பற்றிக் கேட்டால் எப்படி அமைச்சர் பதில் சொல்ல முடியும்? அபராத வட்டி வாங்குவது தவறு அல்லது முறையல்ல என்ற முறையில் கேட்டால் போதும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, பரமக்குடியி லிருந்து அப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கிறது மதிப்பிற் குரிய ராஜா முகமது அவர்கள் கைத்தறிப் பொருட்கள் சோஷலிஸ நாடுகளுக்கு அனுப்பப்படும் என்று சொன்னார்களே அது எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தைப் பற்றி எழுப்பியிருக்கிறார்கள். மத்திய அரசு 1,500 ரூபாய் மானிய மாகக் கொடுக்க ஒப்புக் கொண்டால் தமிழகத்திலே அந்தத் திட்டத்தை எந்த எந்தச் சங்கங்களுக்கு கொண்டுவர முடியும் என்பது பரிசீலிக்கப்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரமக்குடியிலே ஏழை நெசவாளர்கள் அதிகமாக

இருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்தில் இருந்துவருகிறது. எந்தச் சங்கங்கள் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றனவோ எந்தச் சங்கங்கள் இலாபத்தில் இயங்குகின்றனவோ அந்தச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. சிவசாமி : பரமக்குடி பற்றி.....

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சோஷலிச நாடுகளுக்குக் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்வது பற்றிய பரிசிலனை அரசின் செயற்குறிப்பில் இருந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ... (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் அவர்கள் உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது. அவையின் மரபைக் காப்பாற்றுங்கள். அவர்கள் அருமையான சட்டமன்ற உறுப்பினர். மரபைக் கட்டிக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் கூறைநாட்டில் உள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக அங்கே கட்டப்பட்டிருக்கின்ற வீடுகளுக்கு அபராத வட்டித் தொகை நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னால் கொடுக்கப்பட்டது. அப்படிக் கொடுக்கப்பட்டதற்கான பதிலில் மாண்புமிகு அமைச்சரவர்கள் பெரும்பாலும் அதைத் தள்ளுபடி செய்ய அரசு ஆலோசித்து வருகிறது என்று அப்பொழுது அறிவித்திருந்தார்கள். எனவே, அதனையொட்டி மாயூரம் கூறைநாட்டில் உள்ள கைத்தறி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்ற அந்தக் கடனுக்கு அபராத வட்டித் தொகையைத் தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, 27-4-70 வரை சேர்ந்த அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்து அரசு ஆணை வழங்கிவிட்டது. அதற்குப் பிறகு இந்த அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்மென்ற கோரிக்கைகள் அரசுக்கு வருகின்றன. இந்தக் கோரிக்கைகளில், அரசுக் கடன் மீதான வட்டி பூராவையும்

1979 பிப்ரவரி 24]

தள்ளுபடி செய்து அசல் தொகையைச் சுலபமான தவணைகளில் பிடிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளது. இதை நிதித் துறை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே இந்த வட்டியையும் கடனையும் நீண்டகாலத் தவணை முறையில் செலுத்த முடியுமா என்ற செயற்குறிப்பை இப்பொழுது இந்தத் துறை பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் — விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை அளித்தல்.

கீழ்த்தஞ்சை விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 82-வது விதியின் கீழ் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்கள் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1969-ம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியைச் சார்ந்த நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம் சீர்காழி ஆகிய ஏழு வட்டங்களில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

நடப்பு வேளாண்மைப் பருவத்தின்போது இச் சட்டத்தின்படி கொடுக்கப்பட வேண்டிய ஊதிய விகிதங்களை மாற்றி அமைக்க விவசாயத் தொழிலாளர்களின் முறையீடுகள் மீது, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், நில உடைமையாளர்கள், விவசாயிகள் ஆகியவர்களின் பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு முத்தரப்புக் கூட்டம் நடத்தினார்கள். ஆனால் ஒரு உடன்பாடும் ஏற்படவில்லை. ஆகவே அரசு, இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கூலி விகிதங்களை மறு பரிசீலனை செய்வதற்காக அரசு ஆணை எண் 1600, வருவாய், 15—7—1978-ம் நாளில் ஓர் ஒரு நபர் கமிஷனை நியமித்தது. வருவாய் வாரிய உறுப்பினர் திரு. ராம்சந்தர் இக்கமிஷனாக நியமிக்கப்பட்டார். 1978, ஜூலை மாதத்தின் சந்தை விலையை மனதிற்கொண்டு ஒரு இடைக்கால அறிக்கையை கமிஷன் அளித்தது. அரிசிக்காக அரசு நிர்ணயித்த விலையைக் கருத்திற்கொண்டு, பூராவும் பணமாக ஊதியம் வழங்கப்படும் பொழுது 50 காசுகளை உயர்த்திக் கொடுக்கப் பட்டது என்பது உங்களுக்குத் தெரியும்.